## ஏப்ரல் – 22

**"மனுஷர் பேசும் வீணான (லாபகரமற்ற அல்லது கேடு விளைவிக்கிற) வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." - மத் 12 : 36**

தன்னுடைய வழிகளை தினமும் ஆழ்ந்து சோதிப்பது ஒவ்வொரு கிறிஸ்தவனின் கடமையாயிருக்கிறது. அப்படிப்பட்ட சோதனையில், எதாவது நமது வார்த்தைகள் கர்த்தருக்குக் கனவீனத்தைக் கொடுத்ததாக நாம் கண்டு கொண்டால், நம்முடைய நீதிபரரின் (பரிந்து பேசுபவரின்) நாமத்தில் கிருபையின் சிங்காசனத்தை அணுகலாம் என்று நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அங்கு தவறை நாம் உணர்ந்து கொண்டதையும், பரிசுத்த நடக்கையாலும், பேச்சினாலும், அவருடைய நாமத்தையும், அவருடைய விவகாரத்தையும் கனம் பண்ண நாம் தவறிப் போனதையும், அதற்காக ஆழ்ந்த வருத்தத்தையும், நமது பரம பிதாவுக்கு விளக்கிச் சொல்லலாம். கர்த்தருடைய மதிப்பு மிக்க இரத்தத்தில் நம்முடைய எல்லா நம்பிக்கையும் இருக்கிறதென்று தாழ்மையுடனும், உரிமையுடனும் கேட்டு, அந்தப் பாவத்தை நம்மேல் சுமத்தாமல், கிறிஸ்து மூலமாக நமக்கு சுத்திகரிப்பு உண்டாயிருக்கிற அவருடைய கிருபையுள்ள ஏற்பாட்டின் மூலமாக அது நிவர்த்தி செய்யப்பட, தாழ்மையோடு கேட்டுக் கொள்ளலாம். இவ்விதமாக நாம் ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நம்முடைய கணக்கை ஒப்புவிக்க வேண்டும். விசுவாசத்தை உபயோகப்படுத்தி கிறிஸ்துவின் புண்ணியங்களினால் நிறைவு படுத்தப்பட்ட நம்முடைய மனந்திரும்புதலின் வார்த்தைகளினாலே நாம் விடுதலை செய்யப்படுவோம். **-Z '96, 32 (R 1937).**

சொல்லப்படும் வார்த்தைகள் மனோபாவங்களைத் தெரிவிக்கிறதாக மாத்திரம் இருக்கின்றன. ஆகையால், அவைகள் ஒருவருடைய குணத்தை உண்டு பண்ணுகின்றன. பிரஜோயனமற்றதும், கேடு விளைவிக்கிறதுமான யோசனைகளே வெளியிடப்படுகிற வீணான வார்த்தைகள். அவைகள் கட்டாயம் குணத்தைக் கெடுக்கின்றன. ஜீவனுக்காக ஒருவன் சோதனைக்கு வரும் போது, குணத்தின் இந்தக் கெடுதிக்காகக் கணக்கு ஒப்புவித்து சரி செய்ய வேண்டும். ஆகையால், ஒவ்வொருவருக்கும் இவ்விதமாக ஜெபிக்க இது தகுதியாயிருக்கிறது. "கர்த்தாவே என் வாய்க்குக் காவல் வையும். என் உதடுகளின் வாசலைக் காத்துக் கொள்ளும்." **-P '20, 71.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 26:1-4; 50:3-6; 139:23,24; எரே 11:20; 20:12; 2தெச 1:4,5; மத் 25:14-30; 1கொரி 11:31; எசே 18:20-28; மத் 11:22; 12:37-42; 25:31-46; யோவா 5:22-30; அப் 17:31; ரோம 2:5-16; 1பேது 4:5,7.

**கோபுர வாசிப்பு : Z '14, 245 (R 5517).**

**வினாக்கள் :** இந்த வசனத்தின் சம்பந்தமாக இவ்வார அனுபவங்கள் என்ன? அவற்றிலிருந்து நான் கற்றுக் கொண்ட பாடங்கள் என்ன?